செய்தி வெளியீடு எண்: 44 நாள்: 14.01.2011

# செய்தி வெளியீடு

## கோவை மலர் கண்காட்சி 2011

கோவை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் மற்றும் ரோட்டரி கிளப் கோயம்புத்தூர் அப்டவுன் இணைந்து “4–வது கோவை மலர் கண்காட்சி–2011" நிகழ்ச்சியை வருகின்ற 2011 ஜனவரி மாதம் 29 முதல் 31 வரை நடத்துகின்றன. முதன் முதலில் “கோவை மலர் கண்காட்சி 2005", தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தின் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடும் வகையில் 2005–ல் நடைபெற்றது. அதைத்தொடர்ந்து இரண்டாவது மலர் கண்காட்சி 2006–லும், பின்னர் 2010–லும் கொண்டாடப்பட்டது. முதல் மூன்று விழாக்களின் வெற்றியைத் தொடர்ந்து வருகின்ற ஜனவரி மாதம் 2011–ல் நான்காவது முறையாக கோவை மலர் கண்காட்சி தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக தாவரவியல் பூங்காவில் நடைபெறவுள்ளது.

## மலர்க் கண்காட்சியின் சிறப்பம்சங்கள்

- ஹாலந்து, தாய்லாந்து, சிங்கப்பூர் மற்றும் நியூசிலாந்து போன்ற நாடுகளிலிருந்து மலர்கள் இறக்குமதி செய்யப்பட்டு “டச்சு அலங்காரக் கூடம்" வைக்கப்படவுள்ளது.
- இந்தியாவில் பயிராகும் முக்கிய கொய் மலர் மற்றும் உதிரி மலர்களைக் கொண்டு தனியாக ஒரு கூடம் அமைக்கப்படவுள்ளது.
- பல்வேறுபட்ட மலர்களினால் “மலர்க்கோல அலங்காரம்" செய்யப்படவுள்ளது.
- உலர் மலர் அலங்கார கைவினை பொருட்கள் காட்சிக்கு வைக்கப்படவுள்ளது.
- அழகு இலைகளில் அலங்காரக் கூடம்
- "போன்சாய்"கூடம்
- மலர்கள் கூறும் செய்தி
- காய்கறிகளில் சிற்பங்கள்

## கோவை மலர் கண்காட்சி 2011–ன் இதர அம்சங்கள்

கோவை மலர் கண்காட்சி 2011, நாட்டின் அனைத்துப் பகுதியிலுள்ள மலரியல் தொடர்புடைய தொழில் முனைவோர்கள், இறக்குமதி செய்வோர்கள், மலர் விவசாயிகள் மற்றும் கொய் மலர் உற்பத்தியாளர்கள் ஆகியோர்களை இணைக்கும் ஒரு அடித்தளமாகவும், மாணவர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்களின் திறமையை வெளிப்படுத்தும் விதமாகவும் மற்றும் பொது மக்களுக்கு சிறந்த ஒரு வண்ண பொழுதுபோக்கு நிகழ்ச்சியாகவும் நடத்தப்பட உள்ளது.

## பொருட்காட்சி அரங்குகள்

தோட்டக்கலை சார்பு நிறுவனங்கள், வேளாண்மை சார்ந்த தொழில் நிறுவனங்கள், வங்கிகள், கல்வி நிறுவனங்கள் மற்றும் சித்த மருத்துவத் துறைகள் ஆகியவை இக்கண்காட்சியில் கலந்து கொண்டு பொருட்காட்சி அரங்குகள் அமைக்கவுள்ளனர்.

# <u>கோவை மலர் கண்காட்சியில் நடக்கவிருக்கும் போட்டி விவரங்கள்</u>

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் மற்றும் ரோட்டரி கோயம்புத்தூர் அப்டவுன் இணைந்து நான்காவது முறையாக கோவை தாவரவியல் பூங்காவில் வரும் ஜனவரி 29, 30 மற்றும் 31 தேதிகளில் மாபெரும் மலர்க்கண்காட்சியை நடத்த உள்ளன. இதனையொட்டி பல்வேறு போட்டிகள் நடத்தப்பட உள்ளன. அவை பற்றிய விவரங்கள் பின்வருமாறு.

## <u>1. பள்ளிகளுக்கான போட்டிகள்</u>

<u>அ. ஓவியம் வரைதல் மற்றும் வண்ணம் தீட்டுதல்</u>

- பதிவு கட்டணம் கிடையாது.
- தலைப்பு : மலர்கள் (அல்லது) இயற்கை.

ஆ. மலர் அலங்காரம் – பதிவு கட்டணம் கிடையாது.

இ . சிறந்த பள்ளி பூங்கா

- பதிவு கட்டணம் ரூ. 500
- பூங்காவின் பரப்பளவு 2–5 ஏக்கர்.

## 2. கல்லூரிகளுக்கான போட்டிகள்

<u>அ. ஓவியம் வரைதல் மற்றும் வண்ணம் தீட்டுதல்</u>

- பதிவு கட்டணம் கிடையாது.
- தலைப்பு : மலர்கள்.

ஆ. கவிதை எழுதுதல்

- பதிவு கட்டணம் கிடையாது.
- தலைப்பு : மலர்கள் (அல்லது) இயற்கை.

இ. மலர் அலங்காரம் – பதிவு கட்டணம் கிடையாது.

ஈ. காய்கறி அலங்காரம் – பதிவு கட்டணம் கிடையாது.

உ. சிறந்த கல்லூரி பூங்கா

- பதிவு கட்டணம் ரூ. 500
- பூங்காவின் பரப்பளவு 5 ஏக்கர் அல்லது அதற்கு மேல்

## 3. பொது மக்களுக்கான போட்டிகள்

**அ.** சிறந்த வீட்டு பூங்கா

- தனி குடியிருப்பு – பதிவு கட்டணம் ரூ. 300
- அடுக்கு மாடி குடியிருப்பு – பதிவு கட்டணம் ரூ. 500

**ஆ.** வணிக நிறுவன பூங்கா – பதிவு கட்டணம் ரூ. 1000
**இ.** மலர் அலங்காரம் – பதிவு கட்டணம் ரூ. 100
**ஈ.** சிறந்த புகைப்படம் (Best Photography) – பதிவு கட்டணம் ரூ. 100
**உ.** சிறந்த அங்காடி (Best stall) – பதிவு கட்டணம் ரூ. 100
**ஊ.** சிறந்த மலர்க்கோலம் (Flower rangoli) – பதிவு கட்டணம் கிடையாது.

பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்கு ஓவியம் மற்றும் வண்ணம் தீட்டுதல் போட்டியும், கவிதை எழுதும் போட்டியும் 23–ஆம் தேதியன்று நடைபெறுகின்றன. மேலும் 29–ஆம் தேதியன்று கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கான மலர் அலங்காரம், காய்கறி அலங்காரம் ஆகிய போட்டிகளும் நடைபெற உள்ளன. சிறந்த பூங்கா தேர்வு செய்யப்படும் நாள் பெயர்கள் பதிவு செய்யும் பொழுது அறிவிக்கப்படும்.

போட்டிக்குத் தேவையான மூலப்பொருட்களான பெயிண்ட், மலர்கள், காய்கறிகள் மற்றும் தேவையானவற்றை போட்டியில் கலந்து கொள்பவர்கள் கொண்டு வர வேண்டும். போட்டியில் பங்கேற்க விருப்பமுள்ளவர்கள் வரும் 21 ஆம் தேதிக்குள் தங்களது பெயரைப் பதிவு செய்ய வேண்டும். பதிவுக்கட்டணம் இல்லாத போட்டிகளில் சேர விருப்பமுள்ளவர்கள் தங்களது பதிவை, தொலைபேசியின் மூலம் கூட பதிவு செய்யலாம்.

மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்.

முனைவர். பி. பரமகுரு, பேராசிரியர் மற்றும் தலைவர், மலரியல் துறை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் – 641 003, தொலைபேசி : 0422 6611230.
நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் – முனைவர். எம். கே. சிவா, அலைபேசி : 93631 03457

******

வெளியீடு : இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.